**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**4 |
| Name | : | **தங்கம்** |
| Father's / Husband Name | : | தேவராஜ் |
| Address | : | புதுவிராலிப்பட்டி |
| Age | : | 28/2025 |

**தேதி : 03.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் புதுவிராலிப்பட்டி அரசு பள்ளியில் தூய்மை பணியாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா. 1 முதல் அ.சா.3வரை உள்ளவர்களை தெரியும். நாங்கள் வீடு கட்டுவதற்காக லோன் வாங்கிகொடுத்த வகையில் எதிரியை எனக்கு தெரியும். எதிரி தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக எனது பெயரில் லோன் வாங்கி தர கேட்டார். மாதாமாதம் கடனுக்கான தவணை தொகையை செலுத்திவிடுவதாகவும் கூறினார். சத்தியா மைக்ரோ நிதி நிறுவனத்தில் ரூ.50,000/- கடன் பெற்று எதிரிக்கு ரூ.49,803/- Gpay மூலம் 9943078638 என்ற எண்ணிற்கு அனுப்பிவைத்தேன். துறையூரில் உள்ள முத்துட் நிதி நிறுவனத்தில் ரூ.50,000/- வாங்கி எதிரியிடம் ரூ.50,000/-த்தை எதிரியின் Gpay நம்பருக்கு அனுப்பிவைத்தேன். பெரம்பலூரில் உள்ள BSS என்ற நிதி

நிறுவனத்திலிருந்து இரண்டு லோன் மொத்தமாக ரூ.96,000/- கடனாக பெற்று எதிரிக்கு முதலில் முதல் தவணையாக ரூ. 46,000/-ம் இரண்டாவது தவணையாக ரூ. 50,000/-ம் Gpay மூலம் அனுப்பிவைத்தேன். எதிரியிடம் சுமார் ரூ.2,13,800/-த்தை ரொக்கமாக சிறு, சிறு தவணையாக கொடுத்தேன். எதிரி 3 முறை மட்டும் தவணை முறையாக கட்டினார்.

நிதி நிறுவனத்தினர் என் வீட்டிற்கு வந்து மீதி தவணை தொகைகளை செலுத்துமாறு கூறியபோதுதான் எதிரி ஊரை விட்டு தலைமறைவான விவரம் எனக்கு தெரியவந்தது. அவரது செல்போன் எண்ணை தொடர்பு கொண்டபோது சுவிட்ஜ் ஆப் செய்யப்பட்டிருந்தது. எதிரி என்னிடம் பணம் வாங்கியது போல சுமார் 40 நபர்களிடம் பணம் வாங்கியிருந்ததாக கேள்விபட்டேன். பின்னர் இது சம்மந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுக்க சென்றோம். என்னை போன்று பாதிக்கப்பட்ட அ..சா.1 எதிரியின் மீது புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

சத்தியா மைக்ரோ நிதி **நிறுவனத்தில் என்னுடைய கடன் அட்டை நகல் ்அ.சா.ஆ.26 ஆகவும், முத்தூட் நிதி நிறுவனத்தின் கடன் கணக்கு புத்தகம் நகல் அ.சா.ஆ.27 ஆகவும், ஆசிர்வாத் மைக்ரோ பைனான்ஸ் கடன் அட்டை நகல் அ.சா.ஆ.28 ஆகவும், IDFC நிதி நிறுவனத்தின் கடன் அட்டை நகல் அ.சா.ஆ-29 ஆகவும், துவார நிதி நிறுவனத்தின் கடன் அட்டை நகல் அ.சா.ஆ.30 ஆகவும், BSS நிதி நிறுவனத்தின் கணக்கு பட்டியல் நகல் அ.சா.ஆ.31 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 24.10.2023 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.32 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 25.10.2023 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.33ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 16.12.2023 முதல் 25.12.2023 வரை உள்ள வங்கி கணக்கு பட்டியல்**

**அ.சா.ஆ.34 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 05.01.2024 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.35 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 23.07.2024 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.36 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>குறுக்கு விசாரணை</u>

நான் வீடு கட்டுவதற்கு லோன் வாங்கிய வகையில் எதிரி எனக்கு பழக்கம். எதிரி எனக்கு வீடு கட்டுவதற்கு ரூ.40,000/- லோன் வாங்கி கொடுத்தார். அந்த தவணைகளை நான் எதிரியிடம் கொடுத்துதான் கட்டி வந்தேன். அதை அவர்சரியாக கட்டிவிட்டார் என்றால் சரிதான். எதிரி என் பெயரில் வாங்கிய லோனில் நான் கமிஷன் எதுவும் வாங்கவில்லை. 6 லோன் முழுமையாக எதிரி கட்டவேண்டும். 4 லோன் நானும், எதிரியும் பாதி, பாதி கட்டவேண்டும். ரூ.70,000/- வாங்கிகொடுத்த லோனில் எதிரி ரூ. 40,000/- கட்டிவிட்டார் என்றால்அதைபற்றி எனக்கு தெரியாது. 10 ஆயிரம லோனில் 6 ஆயிரம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். 50 ஆயிரம் லோனில்20 ஆயிரம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். 55 ஆயிரம் லோனில் 40 ஆயிரம் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி வாங்கிய கடனுக்குண்டான தொகையை செலுத்தியுள்ளார் என்றும், செலுத்த வேண்டிய தவணைகளை செலுத்த தயாராக உள்ளார் என்றும் அதன்படி செலுத்தினால் நான் வாங்கிகொள்ள தயார்.

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். Gpay அனுப்புவது எனக்கு தெரியும். இரண்டு லோன் Gpay வில் அனுப்புனேன், மற்ற லோன் பணத்திற்கு என்னுடைய ATM கார்டை கொடுத்துவிடுவேன், எதிரி எடுத்துக்கொள்வார். Gpay அனுப்பிய பணத்தை எதிரியின் வங்கி கணக்கு பட்டியலோடு சரிபார்த்தால்தான்

தெரியும் என்றால் சரிதான். எதிரி வாங்கிய கடனை சரியாக கட்டிவந்தார் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.